விநாயகா மிஷன்ஸ் ஆராய்ச்சி நிறுவனம்



விலை-ரூ.500

9 788196 339722

கொற்றவை

# நவீன இலக்கியங்கள் காட்டும் பெண்

பதிப்பாசிரியர்கள்
முனைவர் ப.ஜெயபாதி
முனைவர் ஆ.சந்திரசேகர்



## பொருளடக்கம்


1. அணையா விளக்கு நாடகம் போற்றும் பெண்ணுணர்வு 11
முனைவர் க.உமாராணி

2. அம்பை சிறுகதையில் பெண் 18
க.பாரதி

3. அம்பையின் சிறுகதைகளில் பெண் 22
சே. அருண்குமார்

4. அம்பையின் பார்வையில் பெண்கள் 27
முனைவர் தே. இராணி எலிசபெத்

5. ஆண்டாள் பிரியதர்ஷினி சிறுகதைகளில் பெண்களின் நிலைப்பாடு 33
முனைவர்.க.உமாமகேஸ்வரி,

6. எஸ்.ராமகிருஷ்ணன் சிறுகதைகளில் பெண்களின் பாத்திரப்படைப்புகள் 43
எ.ஜஸ்டின்

7. ஒப்பீட்டு நோக்கில் மலையக மகளிர் 48
பா.சௌ. ஆஷா, முனைவர் ரோ.க.கேதறின் பிறீடா

8. ஒரே ஒரு ஊர்ல நாவலில் பெண் ஆளுமை 53
டோனிஷா.சோ, முனைவர்.எஸ்.அலக்ஸ் ஜேக்கப்

9. கன்னன் பாட்டில் பெண் 57
செ.பவித்ரா, முனைவர் ஆ.மகாலட்சுமி

10. கற்பு ஒழுக்க மரபில் செல்வ கீதாவின் தலைவி 62
முனைவர் சு. தொண்டியம்மாள்

11. கனவோ நினைவோ கவிதைத் தொகுப்பில் பெண்கள் 69
அ.ஆன்சி, முனைவர்.எஸ்.அலக்ஸ் ஜேக்கப்

12. கனழி விஜயலெட்சுமியின் 'எனக்கான சரி' புனையும் பெண் புனைவுகள் 74
முனைவர் அ.பாரதிராணி

13. கனிமொழியின் கருவறை வாசனை கவிதை தொகுப்பில் பெண்களின் நிலை 81
சௌ.சினேகா

# கண்ணன் பாட்டில் பெண்

**செ.பவித்ரா,**
முழுநேரமுனைவர்பட்டஆய்வாளர்,
**முனைவர் ஆ.மகாலட்சுமி,**
உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை,
நல்லமுத்துக் கவுண்டர் மகாலிங்கம் கல்லூரி,
பொள்ளாச்சி,
pavithramsp123@gmail.com

## முன்னுரை

கண்ணன் பாட்டில் பெண்கள் தமது வாழ்வில் மகிழ்ச்சி அடையும் இரண்டு இடங்களை பற்றி கூறப்படுகிறது. அதில் ஒன்று காதல் செய்தல் அதாவது கண்ணனை தன் காதலியாக எண்ணி அவள் படும் இன்ப துன்பங்களை பற்றி கூறும் இடம் மற்றொன்று கண்ணனை தன் தாயாக எண்ணி அவள் தரும் மகிழ்ச்சியை பற்றி கூறும் இடம் என்ற இரண்டு இடங்களை பற்றி கூறுகிறது. இதில் பாரதியார் கண்ணனை பல்வேறு வகையான நிலைகளில் வைத்து தமது கவிதைகளை எடுத்துரைத்துள்ளார். இக்கட்டுரையில் பாரதியாரின் கண்ணன் பாட்டில் பெண்களின் நிலையில் நின்று அவர் எழுதிய கவிதைகளை பற்றி காண்போம்.

## பெண்

பெண் என்பவள் இந்த சமுதாயத்தில் இன்றியமையாதவளாக இருக்கிறாள். இன்றைய கால பெண்கள் அடிமை நிலையிலிருந்து மாறி மனோ பலத்துடன் இருப்பதால் பலவிதமான சாதனைகளை எட்டி வருகின்றனர். அவர்களின் தன்னம்பிக்கையும் தைரியமும் அவர்களை நிலை நிறுத்த உதவுகிறது. இன்றும் சில இடங்களில் பெண்களுக்கு எதிரான கொடுமைகள் நடந்து கொண்டுதான் இருக்கின்றன. இருப்பினும் பெண்கள் கல்வி கற்பதும் வேலைக்குச் செல்வதும் சற்று அதிகமாகின்றது. அவர்களை ஊக்குவிக்கும் வகையில் அரசனது பல நல்ல திட்ட உதவிகளை அறிவித்தவுடன் மார்ச் எட்டாம் நாளில் மகளிர் தினமாக அறிவித்து பெண்களின் வளர்ச்சிக்கு உறுதுணை புரிகிறது இவ்வாறு உள்ள பெண்களை "பிங்கள நிகண்டு பக்கம் 151ல் பெண்களுக்கு உண்டான பெயராக அறிவை, அங்கனை, மடந்தை, ஆடவல் ,தெரிவை, மானினி ,சிறுமி ,இளம் பிடி, கரி குழல், மகடு, காந்தை, மாது, வணித்தை, நல்லால், காரிகை, தழுவியல், அணங்கு, தையல், பெரும்பை, பெயரை ,மடந்தை, மங்கை, மாயோல் ,பாவை, பினா" என 25 பெயர்களை பெண்களுக்கு உரிய பெயராக கூறுகிறது இதில் பெண் என்ற சொல்லு பலராலும் அழைக்கப்படும் நிலையான சொல்லாக இன்று வரை இருக்கிறது.

## தாயாக கண்ணன்

இக்கவிதைகளில் கண்ணனை தன் தாயாக எண்ணி பாடியிருக்கிறார், அதில் தன் தாய தனக்கு கொடுத்த அற்புத உலகத்தினை பற்றிய சிறப்புகளை கூறுகிறார், அத்துடன் தாய்மையின் முக்கியமான நிலையான குழந்தைக்கு

ஒரு தாய் தாய்ப்பால் ஊட்டும் நிகழ்வு தான், அந்த நிகழ்வினை பாரதியார் தமது கவிதைகளில்,

"உண்ண உண்ண தெவிட்டாதே அம்மை

உயிரெனும் முலையினில் உயர்வெனும் பால்

வண்ணமுற வைத்தனுக்கே -என்றன்" (கண்ணன் பாட்டு-2(1)

என்ற பாடலில் தன் தாயான கண்ணன் தனக்கு பாலூட்டுவதை பற்றி கூறுகிறார், அதில் ஒரு தாயின் உயிராக விளங்குவது மார்பு அந்த மார்பினில் இருந்து அவள் எனக்கு ஊட்டும் பால் ஆனது உண்ண உண்ண தெவிட்டாத அமிர்தம் ஆகும். அவள் அந்தப் பாலை என் வாயில் வைத்து ஊட்டி விடும் கொடைத்தன்மை உடைய வள்ளல் அத்தகைய தாயானவள் எனக்காக பல சாத்திரக் கதைகளை எல்லாம் கூறி மகிழ்ச்சி அடைவாள். எனக்கு ஒரு இடத்தில் பெண்மையின் புனிதத்துவத்தை பற்றி கூறுவதை இப்பாடலின் வரிகளில் காணலாம். இதேபோல் திரிகடுகமானது தாய் அ ... ன் 59/371
இன்றியமையாமையை கூறும்போது,

"வாய் நன்கு அமையாக் குளனும் வயிறு ஆரத்

தாய்முலை உண்ணாக் குழவியும், சேய் மரபின்

கல்வி மாண்பு இல்லாத மாந்தரும், இம்மூவர்

நல்குரவு சேரப்பட்டார்" ( திரிகடுகம் - 84)

என்ற பாடலில் தாய்ப்பாலின் இன்றியமையாமையே அறிய முடிகிறது. அதாவது தாய் அன்பாக ஊட்டும் தாய்ப்பால் ஆனது வயிறு நிறைய கிடைக்காத அல்லது உன்னத குழந்தையானது வறுமை நிலைக்கு உரியது என திரிகடுகம் தமது பாடலில் கூறுகிறது.இவ்வரிகளில் தாய்ப்பால் ஆனது ஒரு குழந்தைக்கு எவ்வளவு முக்கியத்துவமானது என்பதை காண முடிகிறது.

**காதலியாக பெண்**

இதில் கண்ணனை தன் காதலியாக என்னை கவிதை ஏற்றியுள்ளார். இதில் கண்ணன் என்னும் காதலே ஒவ்வொரு இடங்களுக்கு தகுந்தாற்போல் எண்ணி பாடி இருக்கிறார். இதில் முதலில் தன் காதலின் மீது கொண்ட அன்பின் வெளிப்பாடாக,

"மூத்தவர் சம்மதியில் வதுவை முறைகள் பின்பு

செய்வோம் காத்திருப்பேனோ டீ - இதோ

பார் கன்னத்தில் முத்தமொன்று" (கண்ணன் என் காதலி- (16(3)

என்ற பாடலில் கண்ணனை தன் காதலியாக நினைத்து அவள் மீது கொண்ட அன்பினை பற்றி கூறுகிறார். பெரியவர்களின் அனுமதியைப் பெற்ற பின்பு அவர்களின் சம்பந்தத்துடன் திருமணம் செய்து கொள்ளலாம். ஆனால் அது வரை என்னால் பொறுத்துக் கொள்ள முடியுமா எனக் கூறி அவள்

கன்னத்தில் ஒரு முத்தத்தையும் கொடுக்கும் இடத்தில் தன் காதலின் மீது அவள் கொண்ட அன்பினை பற்றி காண முடிகிறது.

**காதலியின் முகம் காணல்**

தன் காதலியான கண்ணன் ஆனவள் தன் பின் விழுந்து தன் கண்ணை மூடி கொள்கிறாள். அவள் கைகளை விளக்கி அவள் முகம் கண்டதை பற்றி பாரதியார்,

"நெறித்து திரை கடலில் நின்முகம் கண்டேன்
நீல விசும்பினிடை நின்முகம் கண்டேன்
திரித்த நுரையினிடைநின் முகம் கண்டேன்"

(கண்ணன் என் காதலி -17(4)

என்ற பாடலில் ஒரு சாயங்கால நேரம் தான் ஒரு திண்ணையின் மீது அமர்ந்திருந்தேன். அமர்ந்து கொண்ட வானத்தையும், பூமியையும் பல காட்சிகளையும் என் மனதில் எண்ணிக் கொண்டிருந்த போதும் எனக்கு பின்னால் ஒருவர் வந்து என் கண்ணை தன் கரங்களால் மூடிக்கொண்டார். அப்போது என் மனதில் ஏற்பட்ட பெரு மகிழ்ச்சியினால் அது யார் என கண்டு கொண்டேன். அடியே கண்ணம்மா என்னிடத்தில் மாலை மாய வேலைகள் காட்டுகிறாயா என்கின்றார் .அப்பொழுது கையை எடுத்து கண்ணம்மா எதை பார்த்துக் கொண்டிருக்கிறாய் என்று என்னை கேட்டால், அப்பொழுது அவளிடம் அடியே கண்ணம்மா நெருங்கி அலைகளை உடைய சமுத்திரத்தில் உன் முகத்தை கண்டேன். இந்த பெரிய நீல நிற ஆகாயத்தில் நடுவிலும் உனது முகத்தையே கண்டேன் மாற்றி மாற்றி அலை அடித்துக் கொண்டிருக்கும் நீர் துளிகளில் கூட உன் முகத்தையே கண்டேன். மேகங்களை பார்த்துக் கொண்டிருந்த போதும் கூட உன் முகமே எனக்குத் தோன்றியதே தவிர வேறொன்றும் தோன்றவில்லை. இப்பொழுது உனது சிரிப்பு சத்தத்தை கேட்டு உன் கரங்களை விளக்கி திரும்பி உன்னை கட்டி தழுவி உன் முகத்தையே பார்த்துக் கொண்டிருக்கிறேன் என்று கூறுகிறார். அவ்வாறு கூறும் இடத்தில் தன் காதலியின் மீது தான் கொண்ட அன்பினால் காணும் இடம் அனைத்திலும் அவள் முகமே வெளிப்படுவதாக கூறுகிறார். இதில் காதலியாக ஒரு பெண் அடையும் மகிழ்ச்சி நிலையை பற்றி காணலாம்.

**பிரிவு ஆற்றாமை**

பிரிவு ஆற்றாமை நிலை என்று கூறினால் தலைவனை பிரிந்து படும் துயர நிலையை பற்றி கூறுவதை ஆகும். இந்தப் பிரிவு ஆற்றாமையை நிலையை பற்றி பாரதியார் தமது கவிதைகளில் கண்ணனை தன் காதலன் ஆக நினைத்து பாரதியார் காதலியாக கொண்டு பாடிய பாடல் ஒன்றில்,

"தூண்டில் புழுவினைப் போல் -வெளியே
சுடர் வழக்கை போல்
நீண்ட பொழுதாக - எனது

நெஞ்சம் துடித்ததடி

கூண்டுக்கிளியை போல்- தனிமை

கொண்டு மிகவும் நொந்தேன்" ( கண்ணன் என் காதலன்10(1)

என்ற பாடலில் காதல் கொண்ட தலைவியான பாரதியார் தன் தலைவன் மீது கொண்ட காதலால் அவரை பிரிந்து படும் துன்பத்தை பற்றி கூறுகிறது இப்பாடல் இதில் இப்பாடல் தோழியிடம் தலைவி கூறுவதாக அமைகிறது. இதில் அடியை தோழி தூண்டில் அகப்பட்ட புழுவைப் போல நான் நீண்ட நேரமாக துடிதுடித்துக் கொண்டிருக்கிறேன். வெட்ட வெளியில் ஏற்றி வைக்கப்பட்ட தீபச்சுடரை போல நான் அங்கும் இங்கும் அல்லல் படுகிறேன். கூண்டில் அடைபட்டுக் கொண்டிருக்கும் கிளியை போல தனிமையினால் நான் மிகவும் வருந்துகிறேன். எனக்கு கிடைத்த பொருள்கள் அனைத்தும் இன்று எனக்கு பிடிக்காமல் அடியோடு வெறுத்து விட்டேன் என்று தலைவி தலைவனை பிரிந்த துயரினால் அவனை எண்ணி எண்ணி தன் வாழ்வில் தனக்கு பிடித்த அனைத்தையும் வெறுத்து ஒதுக்குவதை பற்றி இப்பாடல் கூறுகிறது. இதுபோன்ற பிரிவு ஆற்றாமையை பற்றி கலித்தொகையானது பின்வருமாறு கூறுகிறது.

"என்பதோ

கடை எனக் கலுழும் நோய் கைம்மிக, என் தோழி

தடையின திரண்ட தோள் தகை வாட, சிதைத்ததை?" (கலித்தொகை -45)

என்னும் பாடலில் தலைவி தன் தலைவனை பிரிந்து வாழும் வேலையை பற்றி கூறுக இதில் மழைக்காட்டில் வளர்ந்திருக்கும் மூங்கில் போல் இருக்கிறது. என்று என் தலைவியின் தோள்களின் நிலையை சொல்வது எப்படி நாம் நாம் இறக்கும் கடைசி நிலைக்கு வந்து விட்டோமே என்று அவள் அழுது அழுது உன்னை பிரிந்து நோயினால் வருத்தம் அடைகிறாள். திரண்ட அவளின் தோள்களின் தன்மையை நீ பாடச் செய்து விட்டாயே என்று தோழி தலைவனிடம் தலைமையின் நிலையை கூறும் இடத்தில் பிரிவு துன்பத்தினால் தலைவியின் தோள்கள் பலம் இழந்ததையும் அவள் பிரிவினால் வருத்தமடைவதையும் பற்றி இப்பாடலில் கூறப்படுகிறது. இதேபோல் மற்றொரு பாடலில் இந்த பிரிவு ஆற்றாமை நிலையை பற்றி,

"மேனி கொதிக்குதடீ! - தலைசுற்றியே

வேதனை செய்குத டீ!

வானில் லிடத்தை யெல்லாம் இந்த வெண்ணிலா

வந்து தழுவுது பார்!

மையான திருத்த தடீ! -இந்த வையகம்

மூழ்கித் துயிலினிலே

நானொருவன் மட்டிலும் - பிரிவென்பதோர்

நரகத்துழலுவதோ?" (கண்ணன் என் காதலி -20(2)

என்ற பாடலில் தன் காதலியின் பிரிவு ஆற்றாமையை பற்றி கூறுகிறது. இதில் தலைவன் தன்றடைவையே பிரிந்து இருக்கும் நிலையில் பாடுவதாக இப்பாடல் அமைகிறது. இப்பாடலில் என் உடலானது அனலை போல கொதிக்கிறது. தலை கிறுத்து தடுமாறுகிறது. ஆகாயத்தில் உள்ள அனைத்து நட்சத்திரங்களின் ஒலிகளையும் நிலா வந்து அணைத்துக் கொள்வதை பார் இந்த உலகமானது மௌனமாக துக்கத்தில் மூழ்கி கிடக்கிறது. தன்னந்தனியாக நான் மட்டும் உன்னுடைய பிரிவு என்னும் துன்பத்தில் விழுந்து மூழ்கி துன்பப்பட்டு கிடக்கிறேன் என்று கூறும் இடத்தில் தலைவியின் பிரிவை தாங்க முடியாமல் தலைவன் படும் துன்பம் கூறப்படுகிறது. இங்கு தலைவியானவள் அன்பில் முக்கியத்துவம் பெறுவதை காண முடிகிறது.

## முடிவுரை

பெண் என்பவள் சமுதாயத்தில் முக்கியமாக அங்கம் வகிப்பதை நாம் அறிகிறோம். இத்துடன் பெண்மையை போற்றியும் வளர்த்தும் வருவதில் நம் தமிழ் கவிதைகளும் கட்டுரைகளும் இலக்கியங்கள் என அனைத்தும் இன்றியமையாததாக அமைகிறது.

பெண் கல்வி, பெண் வளர்ச்சி, பெண் முன்னேற்றம், பெண் சுதந்திரம் என நாம் பெண்களுக்கு உண்டான படவற்றை பற்றி இன்று ஓரளவு பேசி அதற்கு உறுதுணையும் அழைத்து வருகிறேன். அப்படிப்பட்ட இச்சமுதாயத்தில் பெண்களுக்கு முக்கியத்துவம் கொடுத்து முதலில் கவிதை படித்தவர் பாரதியார் என்றே கூறலாம். அவர் பெண்களின் முன்னேற்றத்திற்காக பல கவிதைகளை வீர மிகுந்த கூறியிருக்கிறார். அவரது கவிதைகளில் வரும் கண்ணன் பாட்டில் பாரதியார் கண்ணனை தன் காதலியாகவும், காதலனாகவும், அத்துடன் தனது தாயாகவும், எண்ணி கவிதை படைத்துள்ளார். அதில் அவர் பெண்களுக்கு கொடுக்கும் முக்கியத்துவத்தை பற்றி இக்கட்டுரையில் காண முடிகிறது.

## துணை நின்ற நூல்கள்


(1). உஷாராணி சு.பாரதியார் கவிதைகள் மூலமும் தெளிவுரையும், தொகுதி -1, வர்த்தமானன் பதிப்பகம், சென்னை-2017.

(2). உஷாராணி சு., பாரதியார் கவிதைகள் மூலமும் தெளிவுரையும், தொகுதி - 2 வர்த்தமானன் பதிப்பகம், சென்னை-2017.

(3). பிங்கல நிகண்டு, கழக வெளியீடு, திருநெல்வேலி தென்னிந்திய சைவ சித்தாந்த நூல் பதிப்புக்கழகம், திருநெல்வேலி. முதல் பதிப்பு-1968.

(4) திரிகடுகம், பதினெண் கீழ்க்கணக்கு நூல்களில் மூலமும் தெளிவுரையும் தொகுதி- 2, தமிழ் நிலையம், சென்னை. இரண்டாம் பதிப்பு- 2014.

(5). உரையாசிரியர் ஆ.விசுவநாதன், கலித்தொகை, நியூ செஞ்சுரி புத்தக நிலையம், ஐந்தாம்பதிப்பு-2013.


◆◆◆◆◆◆◆◆◆◆◆